<u>MELUR MUNICIPALITY</u>
<u>Minutes of the Council Meeting held on 27.04.2020 (Ordinary)</u>

| Resolution No. | Serial Number and subject in the Agenda | Decision of the Council |
|---|---|---|
| 679 | **மன்றப்பொருள் எண்.01**<br>இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட சிவகங்கை நெடுஞ்சாலையில் ஆர்,சி.பள்ளி மேற்கே அமைந்துள்ள கழிப்பறை மக்கள் பயன்பாடு இன்றி இடிந்து விழும் நிலையில் உள்ளதால் பொதுமக்களுக்கு உயிர் சேதம் ஏற்படுவதை தவிர்க்கும் பொருட்டு மேற்படி கழிப்பறையை ஒப்பந்ததாரர் சொந்த செலவில் இடித்து அப்புறப்படுத்தியும் ஆக்கிரமிப்பை தவிர்க்கும் வகையில் காலியிடத்தை மாத வாடகைக்கு விட 28.02.2020 அன்று மதுரை மணி நாளிதழில் விளம்பரம் செய்த வகையில் ரூ.24,064/- விளம்பரக் கட்டணம் செலுத்த மன்றத்தின் அனுமதிக்கு.<br>அலுவலக குறிப்பு - மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.200/2020/அ2) | அனுமதிக்கப்பட்டது |
| 680 | **மன்றப்பொருள் எண்.02**<br>இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.13 மேலத்தெருவில் அமைந்துள்ள அய்யப்பன் கோவில் மேல்நிலைநீர்த் தேக்கதொட்டி அருகில் உள்ள நகராட்சிக்கு சொந்தமான வணிக வளாகத்தில் முதல் தளத்தில் உள்ள இடத்தை மாத வாடகை அடிப்படையில் ஒப்பந்தப்புள்ளி கோர 28.02.2020 அன்று தினசரி நாளிதழில் விளம்பரம் செய்த வகையில் விளம்பரக் கட்டணம் தமிழக நியுஸ் பத்திரிக்கைக்கு ரூ.19,800/- வழங்க மன்றத்தின் அனுமதிக்கு.<br>அலுவலக குறிப்பு- மன்றம் அனுமதிக்கலாம்<br>(ந.க.எண்.2768/2018/அ2) | அனுமதிக்கப்பட்டது |
| 681 | **மன்றப்பொருள் எண்.03**<br>இந்நகராட்சியில் தம்மை ஒப்பந்ததாரராக பதிவு செய்ய வேண்டி திருமதி. எஸ்.காஞ்சனா என்பவர் உரிய ஆவணங்களுடன் விண்ணப்பித்துள்ளார். அன்னாரை இவ்வலுவலகத்தில் 5ம் நிலை | அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | ஒப்பந்ததாரராக பதிவு செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு- 1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று உத்திரவு வழங்கியமைக்கும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.3053/2017/இ1) | |
| 682 | **மன்றப்பொருள் எண். 04**<br>மேலூர் நகராட்சிப் பகுதியில் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் மேற்க்கொள்ளப்பட்ட திட்டப்பணி விபரங்களை கீழ்க்கண்ட விபரப்படி மக்கள் குரல் நாளிதழில் வெளியிட்டமைக்கான விளம்பரக்கட்டணம் வழங்கவும்,மற்றம் பிளாஸ்டிக் பொருட்கள் பயன்படுத்தாமைக்கான விழிப்புணர்வு விளம்பரம் மாலை மலர் பொங்கல் மலரில் வெளியிட்டமைக்கான கட்டணம் வழங்க கோரப்பட்டுள்ளது.<br><br>வ.எண் \| நாளிதழ் \| நாள் \| தொகை<br>1. \| மக்கள் குரல் \| 13.03.2020 \| 15750/-<br>2. \| மாலை மலர் \| 14.01.2020 \| 14700/-<br><br>மேற்கண்ட தொகைகளை மக்கள் குரல் மற்றும் மாலை மலர் நாளிதழ்களுக்கு வழங்க மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு- மன்றம் அனுமதிக்கலாம். | அனுமதிக்கப்பட்டது |
| 683 | **மன்றப்பொருள் எண்.05**<br><br>இந்நகராட்சி மின் மோட்டார்கள் 2020-2021 ஆண்டுப் பராமரிப்பு பணிக்கு கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.<br>1. பி.அமுதா - 1.60 % அதிகம் | அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | 2. எம்.லத்திப் - 0.20% குறைவு<br><br>வரப்பெற்ற இரண்டு ஒப்பந்த புள்ளியில் குறைந்த விலைப்பட்டியல் வழங்கயுள்ள திரு.எம்.லத்திப் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை அனுமதிக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு - 1. அனுமதிக்கலாம்.<br>2. தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியமைக்கும் மன்றம் அனுமதிக்கலாம். | |
| 684 | **மன்றப்பொருள் எண்.07**<br><br>இந்நகராட்சி 27 வார்டுகளில் அமைந்துள்ள குடிநீர் குழாய் மெயின் பம்ப் மற்றும் பகிர்மானக்குழாய்களில் ஏற்படும் பழுதுகளை சரி செய்யும் 2020-2021 ம் ஆண்டு பராமரிப்பு மற்றும் கைப்பம்புகள் , சிறுமின் நிலை மோட்டார்களை ஆண்டு பராமரிப்பு பணியினை மேற்க்கொள்ள கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.<br>1. எம்.லத்திப் - 1.78% அதிகம்.<br>2. பி.அமுதா - 0.30% குறைவு.<br><br>வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த விலைப்பட்டியல் வழங்கியுள்ள திருமதி. பி.அமுதா அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை அனுமதிக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு- 1. அனுமதிக்கலாம்.<br>2. தனிஅலுவலரின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியமைக்கும் மன்றம் அனுமதிக்கலாம் | அனுமதிக்கப்பட்டது |
| 685 | **மன்றப்பொருள் எண்.06.** | அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் 40 பணியாளர்களைக் கொண்டு வரும் ஜெய் ஷீரடி சாய் மேன் பவர் ஏஜென்சி நிறுவனத்தின் ஒப்பந்தக்காலம் 30.04.2020 உடன் முடிவடைவதை ஒட்டி முந்தைய ஆண்டு ஊதிய விகிதமான நாள் ஒன்றுக்கு ரூ.418.90 (நபர் ஒருவருக்கு) 01.05.2020 முதல் 31.03.2021 வரை நிர்வாக காரணங்களை முன்னிட்டு மேலும் 11 மாதங்களுக்கு நீட்டிப்பு செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு- கொரோனா தடுப்பு பணி தீவிரமாக நடைப்பெற்று வருவதை முன்னிட்டும் மாநிலம் முழுவதும் 144 தடை உத்திரவு அமலில் உள்ளதை முன்னிட்டும் அவசர அவசியம் கருதி ஜெய் ஷீரடி சாய் மேன் பவர் ஏஜென்சி நிறுவனத்திற்கு 01.05.2020 முதல் 31.03.2021 வரை உரிமம் ஒப்படைப்பு செய்தமைக்கு மன்றம் அனுமதிக்கலாம். | |
| 686 | **மன்றப்பொருள் எண்.08**<br><br>இந்நகராட்சிக்குட்பட்ட முகமதியாபுரம், மணியக்காரதெரு முதல் ரஹ்மான் கல்யாண மண்டபம் வரை குமார் நகர், எஸ்.எம்.நகர் பின்புறம், சந்தைபேட்டை, பெரிய கடை வீதி பாலம் அருகில், மில்கேட் சிங்கம்மாள் கோவில் எதிர்புறம்,மில்கேட் ரேசன்கடை பின்புறம் ஆகிய பகுதிகளில் புதிய பகிர்மான குழாய் அமைக்கும் பணியினை அவசர அவசியம் கருதி நகராட்சி சட்ட விதிகள் பிரிவு 15ன் கீழ் ரூ.4.20 இலட்சம் மதிப்பீட்டில் இந்நகராட்சி ஒப்பந்ததாரர் திருமதி.பதுரூனிசா என்பவர் மூலம் பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு- அனுமதிக்கலாம். | அனுமதிக்கப்பட்டது |
| 687 | **மன்றப்பொருள் எண்.09.**<br><br>இந்நகராட்சிக்குட்பட்ட பெரிய கருப்பன் காலனி பகுதியில் உள்ள கழிப்பறைக்கு புதிய போர்வெல் அமைத்து பைப் லைன் அமைக்கும் பணியினை அவசர அவசியம் கருதி நகராட்சி சட்டவிதிகள் பிரிவு 15ன் கீழ் ரூ.2.10 இலட்சம் மதிப்பீட்டில் இந்நகராட்சி ஒப்பந்ததாரர் திரு.எம்.லத்திப் என்பவர் மூலம் பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு- அனுமதிக்கலாம். | அனுமதிக்கப்பட்டது |

<table>
<tr><td></td><td></td><td></td></tr>
<tr><td>688</td><td>மன்றப்பொருள் எண்.10<br>இந்நகராட்சி ஈப்பு வாகனத்தின் பேட்டரி பழுதான காரணத்தால் EXIDE HP700R புதிய பேட்டரி ஒன்றினை குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள நிறுவனமான ரமணி ஆட்டோ எலக்ட்ரிக்கல்ஸ் மேலூர் நிறுவனத்திடமிருந்து ரூ.7324/-விலைக்கு பெறுவதற்கும், மேற்கண்ட செலவினத்தை நகராட்சி சட்டவிதிகள் பிரிவு 15ன் கீழ் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு- மன்றம் அனுமதிக்கலாம்.</td><td>அனுமதிக்கப்பட்டது</td></tr>
<tr><td>689</td><td>மன்றப்பொருள் எண்.11<br>இந்நகராட்சி பகுதிகளில் கொரோனா நோய் தடுப்பு பணியை முன்னிட்டு 21.03.2020 முதல் 28.04.2020 வரை கீழ்க்கண்ட பணிகள் தமிழ்நாடு நகராட்சி விதிகள் 15ன் கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ளது.<br><table>
<tr><td>வ.எ</td><td>தேதி</td><td>பணி</td><td>நிறுவனத்தின் பெயர்</td><td>தொகை ரூ.</td></tr>
<tr><td>1.</td><td>21.03.2020</td><td>கொரோனா விழிப்புணர்வு பிளக்ஸ்</td><td>ஜே.பி.பைண்டிங்</td><td>17,500/-</td></tr>
<tr><td>2.</td><td>16.04.2020</td><td>1 HP Motor 4 எண்ணம்</td><td>Sri Harish pandiyan company</td><td>2,17,728/-</td></tr>
<tr><td>3.</td><td>16.04.2020</td><td>Mask Clouse & PPE</td><td>Saravana Medicals</td><td>75,000/-</td></tr>
<tr><td>4.</td><td>22.04.2020</td><td>CCTV Camera</td><td>Sakthi Computers</td><td>1,08,500/-</td></tr>
<tr><td>5.</td><td>22.04.2020</td><td>Mask, Clouse</td><td>Saravana Medicals</td><td>20,800/-</td></tr>
<tr><td>6.</td><td>22.04.2020</td><td>Hand Pump Sprayer</td><td>Haridas Pandiyan &Company</td><td>1,12,926/-</td></tr>
<tr><td>7.</td><td>25.04.2020</td><td>PPE Supply 1000 Nos</td><td>Dreams Infrastructure</td><td>3,15,000/-</td></tr>
<tr><td></td><td></td><td></td><td>Total</td><td>8,87,457/-</td></tr>
</table><br>மேற்கண்ட செலவினம் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.</td><td>அனுமதிக்கப்பட்டது</td></tr>
</table>

| | | |
|---|---|---|
| | அலுவலக குறிப்பு- மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம். | |
| 690 | **மன்றப்பொருள் எண்.12**<br>இந்நகராட்சியின் அலுவலக பயன்பாட்டில் உள்ள கணனி, பிரிண்டர் மற்றும் வலைத்தளம் இணைய தள ஆண்டு பராமரிப்பு 31.03.2020 தேதியுடன் முடிவடைவதால் மீண்டும் 2020-2021ம் ஆண்டிற்கு, ஆண்டு பராமரிப்பினை புதுப்பித்துக் கொள்ளவும் , அதற்கான செலவினத் தொகை ரூ.2,00,000/-த்திற்கும் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு- 1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. அலுவலக பயன்பாட்டிற்கு அவசியம் கருதி விலைப்புள்ளி கோரி மேல் நடவடிக்கை தொடரவும் மன்றம் அனுமதிக்கலாம். | அனுமதிக்கப்பட்டது |
| 691 | **மன்றப்பொருள் எண்.13**<br><br>இந்நகராட்சியின் அலுவலக பயன்பாட்டிற்கு உள்ள கணனி, பிரிண்டர் மற்றும் வலைத்தளம் இணையதளம் 2020-2021 ஆம் ஆண்டிற்கு ஒராண்டு காலத்திற்கு நீட்டித்து வைத்துக் கொள்ள பெறப்பட்ட விலைப்புள்ளிகள் விபரம் கீழ்க்கண்ட படி மன்றத்தின் பார்வைக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.<br><br>1. Sakthi computers, - Rs.1,65,908/-<br>161/4 Nagai kadai bazzar.<br>Alagar kovil street,<br>Melur.<br>2. Jeeva Systems, - Rs. 1,78,200/-<br>16,Channal Road,<br>Melur. | அங்கீகரிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | 3. Welcome Systems, - Rs. 6,64,300/-<br>Shanmuga Complex,<br>Mandaiyan asari street,<br>Madurai.<br><br>அலுவலக குறிப்பு. அ. மன்றம் அனுமதிக்கலாம்.<br>ஆ.மேற்கண்ட விலைப்புள்ளியில் மிகக்குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள மேலூர் சக்தி கம்யூட்டர்ஸ் நிறுவனத்திற்கு 2020-2021 ஆம் ஆண்டு ஒரு வருட ஆண்டு பராமரிப்பு மேற்க்கொள்ள பணி உத்திரவு வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>(கோப்பு எண்.756/2020/சி1) | |
| 692 | **மன்றப்பொருள் எண்.14.**<br>சென்னை பணியாளர் மற்றும் நிருவாகம் சீர்திருத்தத் துறைத் துறை கடிதம் எண்.5550/A2/2020-1 நாள்.19.02.2020 மற்றும் மதுரை மாவட்ட ஆட்சியர் அவர்களின் சுற்றறிக்கையில் நகராட்சி பணியாளர்கள் அனைவரும் கட்டாயமாக நிழற்பட அடையாள அட்டை அணிந்து பணி மேற்க்கொள்ள வேண்டும் என்றும் சென்னை உயர்நீதிமன்ற வழக்கு W.P.No.15640 of 2018 தீர்ப்பாணை நாள்.16.07.2018ல் அடையாள அட்டை அணிவது தொடர்பான விதி கண்டிப்பாக அமல்படுத்தப்பட்டு உறுதி செய்யப்பட வேண்டுமென உத்திரவிடப்பட்டுள்ளதை தொடர்ந்து இந்நகராட்சியின் அனைத்து உள் மற்றும் வெளி பணியாளர்களுக்கு நிழற்பட அடையாள அட்டை தயார் செய்ய பணியின் அவசியம் கருதி குறைந்த விலைப்புள்ளி பெறப்பட்டது மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.<br>1. முத்து - ரூ.140/-<br>ஸ்டூடியோ &வீடுயோஸ், | அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | திருச்சி மெயின் ரோடு,<br>மேலூார்.<br>2. கார்த்தி, - ரூ.130/-<br>ஸ்டூடியோ &வீடுயோஸ்,<br>மதுரை திருச்சி மெயின் ரோடு,<br>மேலூார்.<br>3. நிலா - ரூ.125/-<br>ஸ்டூடியோ &வீடுயோஸ்,<br>14,நகராட்சி வளாகம்,<br>மேலூார்.<br>அலுவலக குறிப்பு- அ. பணியின் அவசியம் கருதி குறைந்த விலைப்புள்ளி கோரியதையும், குறைந்த விலைப்புள்ளி கொடுத்த மேலூர், நிலா ஸ்டியோ&வீடியோஸ் நிறுவனத்தின் முலம் பணி மேற்க்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>ஆ.மேற்க்கண்ட நிழற்பட அடையாள அட்டை தயார் செய்த வகைக்கு ஆகும் செலவினத்திற்கும் மன்றம் அனுமதிக்கலாம். (கோப்பு எண்.022/2020/சி1) | |
| 693 | **மன்றப்பொருள் எண்.15**<br>அலுவலக கணினிப்பிரிவு, பொதுப்பிரிவு, பொறியியல் பிரிவு, பொதுசுகாதார பிரிவு ஆகிய பிரிவுகளில் பயன்படுத்தப்பட்டு வரும் பிரிண்டர்களுக்கு தேவையான கீழ்க்கண்ட TONERகள் தேவைப்படுகிறது.<br>1. Ricoh MP 2014 - 3 Nos<br>2. Ricoh MP 2501 - 1Nos<br>மேற்கண்ட TONERகளை வாங்குவதற்கான உத்தேச செலவினம் ரூ.20000/-க்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு- மன்றம் அனுமதிக்கலாம். | அனுமதிக்கப்பட்டது |

தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்,
மேலூர் நகராட்சி.